**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070220225111

Volume: 7

Issue: 2

Month: October

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 02.07.2022

Accepted: 08.09.2022

Published: 01.10.2022

Citation:
Aravind, M. "Kaanchi Padalam and Makatpaar Kaanchi in Purapporul Venbaamaalai." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 2, 2022, pp. 18–22.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i2.5111

*Corresponding Author:
aravind.yuvan001@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kaanchi Padalam and Makatpaar Kaanchi in Purapporul Venbaamaalai

**M. Aravind**

*Ph.D. Scholar, Department of Tamil*

*Presidency College (Autonomous), Chennai, Tamil Nadu, India*

*https://orcid.org/0000-0002-8289-5455*

**Abstract**

The origin of purapporul venbaamaalai is significant in the development of tamil grammar. This is the one and only individual book about purapporul that was written after the tholkaappiyam. Even today, puram literature is referred through tholkaappiyam and purapporul venbaamaalai. Kaanchithinai has been the focus of the study from time to time because of its impermanence in nature. The same way, the content of kaanchithinai is approached in tholkaappiyam and purapporulvenbaamaalai. Makatpaarkaanchi is one of the thurai, that is situated in such kaanchithinai. This article studies about purapporul venbaamaalai, kaanchithinai and makatpaarkaanchi in a single atraight line.

**Key Words**: Purapporul Grammar, Kaanchi Thinai, Impermanence, War, Marriage

**References**

1. Arunachalam, M., 1975, Thamizh Ilakkiya Varalaaru: Onpathaam Nootraandu (Part - 1), Thanjavur, Gandhi Vidyalayam.
2. Balasubramanian, K.V., 2018, Sanga Ilakkiyaththil Purapporul, Chidambaram, Meiyappan Pathippagam.
3. Ilampooranar, 1969, Tholkaappiyam - Porulathikaaram, Chennai, The South India Saiva Siddhanta Works Publishing Society.
4. Nachchinaarkkiniyar, Ganesaiyar (Ed.), 2007, Tholkaappiyam - Porulathikaaram (Part - 1), Chennai, International Institute of Tamil Studies.
5. Seenisamy, Durai., 2016, Thinai Kotpaadu, Chennai, New Century Book House.
6. Sivanesan, P., 2007, Tholkaappiyarin Ilakkiya Kolgaikal, Chennai, Seethai Pathippagam.
7. Sivapathasundaranar, N., 1972, Purapporul Venbaamaalai Aaraaichi, Srilanka, Vaddukoddai Electorate Thamizh Sangam.
8. Swaminatha Iyer, U.V. (Ed.), 2018, Purapporul Venbaamaalai, Chennai, Dr.U.Ve. SwaminathaIyer Library.
9. Vellaivaranan, K., 2017, ThamizhIlakkiya Varalaaru (Tholkaappiyam), Chennai, Poompuhar Pathippagam.

# புறப்பொருள் வெண்பாமாலையில் காஞ்சிப் படலமும் மகட்பாற் காஞ்சியும்

*மு. அரவிந்*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழிலக்கண வளர்ச்சியில் புறப்பொருள் வெண்பாமாலையின் தோற்றம் குறிப்பிடத்தகுந்தது. தொல்காப்பியத்திற்குப் பின் புறப்பொருள் குறித்து எழுந்த தனி நூல் இதுவாகும். இன்றுவரையிலும் புற இலக்கியங்கள் தொல்காப்பியத்தையும் புறப்பொருள் வெண்பாமாலையையும் கொண்டே அணுகப்படுகின்றன. காஞ்சித் திணையானது அதன் நிலையாமைப் பொருளின் காரணமாகக் காலந்தோறும் ஆய்வின் கவனத்திற்கு உரியதாக உள்ளது. தொல்காப்பியத்திலும் புறப்பொருள் வெண்பாமாலையிலும் காஞ்சித் திணையின் பொருண்மை எண்ணப்படுகிறது. காஞ்சித் திணையில் அமையும் துறையே மகட்பாற் காஞ்சி. புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சித் திணை, மகட்பாற் காஞ்சி இம்மூன்றையும் ஓரே நேர்க்கோட்டில் அணுகி ஆய்கிறது இக்கட்டுரை.*

***முதன்மைச் சொற்கள்:*** *புறப்பொருள் இலக்கணம், காஞ்சித் திணை, நிலையாமை, போர், மணம்*

தொல்காப்பியரின் புறத்திணையியலை மாறுதலுக்கு உட்படுத்தி விரிவாக அமைவதே புறப்பொருள் வெண்பாமாலை. புறத்திணையைத் தனிக்கோட்பாடாக மாற்றி, பாடல்களின் பொருண்மையை மாற்றிக்காட்ட வேண்டியது தேவை என்று கருதியதால் இந்த விரிவாக்கம் ஏற்பட்டிருக்கலாம்.[1] தொல்காப்பியத்திற்குப் பின் அகப்பொருள் நூல்கள் பல தோன்றினும், புறப்பொருள் குறித்துத் தோன்றிய தனி நூல் இதுவென்கிறார் மு. அருணாசலம்.[2]

இது புறம் என்ற ஓர் இலக்கியக் கோட்பாடு பற்றிய நூலாக உள்ளது. அகம், புறம், புறனாதல் என்ற அமைவாக தொல்காப்பியத்துள் சொல்லப்பட்டுள்ள திணைக் கோட்பாட்டின் ஒரு பகுதி என இதனைக் கருதலாம். புறம் பற்றிய புறப்பொருள் வெண்பாமாலையின் கருத்துக்கள் தொல்காப்பியர் கூறும் புறம் பற்றிய கருத்துக்களிலிருந்து வேறுபாடுகள் கொண்டதாக உள்ளன. அகம், புறம், புறனாதல் என்ற முக்கூட்டு திணைக் கோட்பாடு என்ற நிலையிலிருந்து விலகி புறம் என்ற தனித்துவமான கோட்பாட்டின் பெயரில் இது அமைகிறது என்கிறார் துரை. சீனிசாமி.[3]

## அமைப்பு

தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த புறப்பொருள் வெண்பாமாலையில் திணை வகைகள் பெருகி உள்ளதால் துறைகளிலும் அப்பெருக்கம் காணப்படுகிறது. தொல்காப்பியர் திணைக்குரிய விளக்கத்தை முதலில் கூறுவார். அதன் பின்னர் துறைகளைத் தொகுத்துத் தருவார். அப்போக்கு ஐயனாரிதனாரிடம் இல்லை. அவர் முதலில் துறைகளை அடுக்கிக் கூறுகின்றார். பிறகு திணையை விளக்குகின்ற கொளுவையும் எடுத்துக்காட்டு வெண்பாவையும் இடம்பெறச் செய்கின்றார். தொல்காப்பியர் திணை என்று வழங்குவதை ஐயனாரிதனார்

படலம் என வழங்குகிறார். தொல்காப்பியத்திலுள்ள ஏழு திணைகளுடன் கூடுதலாக ஐந்து சேர்ந்து மொத்தம் பன்னிரண்டு படலங்கள் இதில் அமைந்துள்ளன. பொதுவியல் படலம் என்பதுடன் தொல்காப்பியர் அகத்துள் வைத்துக் கூறிய கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் சேர்த்து மூன்று படலங்கள் புதிய சேர்க்கைகள். வெட்சியிலிருந்து கரந்தை தனிப் படலமாகவும், உழிஞையிலிருந்து நொச்சித் தனிப் படலமாகவும் விரிந்துள்ளன. எனவே மொத்தம் ஐந்து படலங்கள் கூடுதலாக இடம்பெற்றுள்ளன.

**காஞ்சிப் படலம்**

தொல்காப்பியர் வாகைத் திணைக்கு அடுத்ததாக ஆறாவதாக வைத்துக் கூறிய காஞ்சித் திணையை, ஐயனாரிதனார் வஞ்சிக்கு அடுத்த நிலையில் நான்காவது படலமாக வைத்துக் கூறுகிறார். தொல்காப்பியர் குறிப்பிடும் காஞ்சித் திணையானது நிலையாமை குறித்த பொருண்மையது. ஆனால் ஐயனாரிதனார் குறிக்கும் காஞ்சியானது வஞ்சி வேந்தனுக்கு எதிரான காவல் போர் பற்றியது. வஞ்சி வேந்தனை எதிர்த்து நிற்றலைக் காஞ்சி எனக் கொண்ட ஐயனாரிதனார், தொல்காப்பியர் காஞ்சித் திணையுள் குறித்த நிலையாமையைப் பொதுவியலில் அடக்கினார் என்கிறார் கு.வெ. பாலசுப்பிரமணியன்.[4]

உலக வாழ்வின் முயற்சிகளில் போர் முயற்சி கொள்ளக்கூடாதென்றும், அவ்வாறு கொண்டால் அம்முயற்சியில் நிலையாமையே பெரிதாய் அமைந்து உலக வடிவை மடித்துவிடும் என்றும், தமிழ் கற்போர் விரைந்து தெளிய வேண்டும் என்பதற்காகவே வஞ்சியின் எதிர்மறை வினைக்குக் "காஞ்சி" என்று பெயர் வைக்கத் துணிந்தார் ஐயனாரிதனார். இக்கருத்தைக் கற்புக் கால்கொள்ளும் முல்லை நிலத்தில் வைத்ததும், மக்கள் உயிர்வாழ முயலும்போதே இவ்வறிவோடு வாழ வேண்டும் என்பதற்காகவேயாம். தொல்காப்பியரின் காஞ்சித்திணை, உலகின் முழுமையொழுக்கம் பற்றியது. உலகவொழுக்கம் என்பதனுட் போர் ஒழுக்கமும் அடங்கும். எனினும், ஐயனாரிதனார் காஞ்சித்திணையில் போர் ஒழுக்கத்தையே சிறப்பாகக் குறிக்கவேண்டிக் காஞ்சியைப் போர்முறையாகவே காட்டத் துணிந்தார்[5] என நா. சிவபாதசுந்தரனார் எதிரூன்றல் காஞ்சி என்பதை விளக்குகிறார். இதன்வழி புறப்பொருள் வெண்பாமாலை தொல்காப்பியத்திலிருந்து முழுமையாக விலகவில்லை என்று தெரிகிறது.

**வேஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்**
**காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று**
**(பு.வெ.காஞ்சி.கொளு, 1)**

என்று காஞ்சித் திணையின் இலக்கணம் வகுக்கிறது புறப்பொருள் வெண்பாமாலை. தன் நாட்டைக் கவரப் படையெடுத்து வரும் வஞ்சியரசனைத் தடுக்கப் போருக்குச் செல்லுதல் காஞ்சித் திணை என்று இதற்குப் பொருள் காணலாம்.

**அருவரை பாய்ந்திறுது மென்பார்பண் டின்றிப்**
**பெருவரைச் சீறூர் கருதிச் - செருவெய்யோன்**
**(பு.வெ.காஞ்சி.வெண்பா, 1:1-2)**

என்ற வெண்பாவைக் காஞ்சித் திணைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுகிறார் ஐயனாரிதனார். இதன் பொருள் யாதெனில், வீணாகக் கழியும் வீரத்தை மலை ஏறுவதில் காட்டி உயிர்விடத் துணிபவர்கள் காஞ்சி மறவர். அத்தகையோர் தம் நாட்டின்மீது பிறர் படையெடுத்து வருவதைக் கேட்டுப் போருக்குச் செல்லப் பொறுமையாக அணிவகுத்து நிற்றலை விரும்பமாட்டார். உடனே சினந்து சென்று பகைவர் எண்ணத்தைப் பாழாக்குவர். அணிவகுத்து நின்று காலம் தாழ்த்துதல் மறவருக்குரிய பண்பாகாது என்பதாகும்.

உலகியலில் நேரும் பல வகைத் துன்பங்களையும் எதிர்த்து நிற்றல் காஞ்சி என்னும் இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே எதிரூன்றல் காஞ்சியென்னுங் கொள்கையும் பிற்காலத்து உருப்பெறுவதாயிற்று. எல்லாப் பொருளினுஞ் சிறந்த சிறப்பென்னுஞ் செம்பொருளைப் பெறுதல் வேண்டி, நில்லாத உலகியல்பில் நேரும் பல்வகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றல் காஞ்சித்திணை யாதல் போல, ஒன்றாவுலகத் துயர்ந்த புகழைப் பெற விரும்பிப் பலவகையின்னல்களுக்கிடையே பகைவர் சேனையைத் தடுத்து நிறுத்தலாகிய போர்ச் செயலும் காஞ்சித்திணையெனவே கொள்ளத்தக்கதாகும்[6] என்று க. வெள்ளை வாரணன் காஞ்சித் திணையை விளக்கிக் கூறுகிறார்.

காஞ்சி - வஞ்சியின் மற்றொரு பகுதியாக மாறியதே புறப்பொருள் வெண்பாமாலையின் முக்கியக் கூறு என்கிறார் துரை. சீனிச்சாமி.[7] இவ்வாறு வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறுபட்ட இருவேறு போர்ச்செயல்களைப் பண்டை நாளில் கொண்டிருந்தன என்பதனை,

**தென்றிசை யென்றன் வஞ்சியொடு வடதிசை**
**நின்றெதி ரூன்றிய நீள்பெருங் காஞ்சியும்**
***(சிலம்பு.காட்சி. 135-136)***

என்று சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் கூற்றாக இளங்கோவடிகள் கூறுவதில் அறியமுடிகிறது. பிங்கல நிகண்டு இதனை "வட்கார் எதிரூன்றல் காஞ்சி" என்று கூறுகிறது. பன்னிரு படலம் "வஞ்சியுங் காஞ்சியுங் தம்முள் மாறே" என்று விளக்குகிறது.

மேற்கண்ட செய்திகளில் இருந்து புறப்பொருள் வெண்பா மாலையின் காஞ்சிப் படலமானது தொல்காப்பியக் காஞ்சித் திணையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நிலையாமைப் பொருண்மையைக் கூறாமல் காவல் போர் பற்றியதாக அமைந்துள்ளது என்பதனை அறியமுடிகிறது.

**மகட்பாற் காஞ்சி**

புறப்பொருள் வெண்பாமாலையின் காஞ்சிப் படலத்துள் இருபத்தொரு துறைகள் இடம்பெற்றுள்ளன. பொது வியல் படலத்துள் அமைந்துள்ள, காஞ்சிப் பொதுவியற்பால் என்ற பகுதியில் வரும் துறைகளையும் காஞ்சித் திணையோடு சேர்த்துக் கூறுவார் பா. சிவநேசன்.[8] மகட்பாற் காஞ்சியானது காஞ்சிப் படலத்துள் இருபதாவது துறையாக இடம்பெற்றுள்ளது.

**ஏந்திழையாட் டருகென்னும்**
**வேந்தனொடு வேறுநின்றன்று**
***(பு.வெ.காஞ்சி.கொளு, 24)***

என்று மகட்பாற் காஞ்சியின் இலக்கணம் கூறுகிறார் ஐயனாரிதனார். அழகிய அணிகலன்களை அணிந்த காஞ்சியரசின் மகளை மணம் முடித்துத் தருக என்று கேட்ட வஞ்சியரசனுடன் காஞ்சியரசன் மாறுபட்டு நிற்பது மகட்பாற் காஞ்சி என்று இதற்குப் பொருள் கூறலாம்.

இங்கு முக்கியமாக நோக்க வேண்டியது யாதெனில் தொல்காப்பியர் பெண் கேட்டு வருபவர் வேந்தர் என்றும், பெண் கொடுக்க மறுப்பவர் முதுகுடித் தலைவர் என்றும் குறிப்பிடுகிறார்.[9] ஆனால் ஐயனாரிதனார் பெண் கேட்டு வந்தவரை வஞ்சியரசராகவும் பெண் கொடுக்க மறுப்போரை காஞ்சியரசராகவும் வரையறுக்கிறார்.[10]

தொல்காப்பியர் கூறும் முதுகுடித் தலைவர் என்பதற்கு வணிகர், வேளாளர் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுவதையும் "அனைநிலைவகை" எனக் குறிப்பிட்டுப் பார்ப்பனர், அறிவர், தவம் செய்வோர், பொருநர் போன்ற முதுகுடித் தலைவர் அல்லாத பிறர்க்கும் இத்துறை உரியது என்று கூறுவதையும் இங்கு எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.[11]

**அளிய கழல்வேந்த ரம்மா வரிவை**
**எளியளென் றெள்ளி யுரைப்பிற் - குளியாவோ**
**பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாண்முகத்த**
**கண்போற் பகழி கடிது**

**(பு.வெ.காஞ்சி.வெண்பா, 24)**

என்ற வெண்பாவை மகட்பாற் காஞ்சிக்கு எடுத்துக்காட்டாகக் கூறுகிறார் ஐயனாரிதனார். காஞ்சி வேந்தனின் மகள் திருமகளை ஒத்த அழகுடையவள். அவளை மிகவும் எளிதில் அடைந்துவிடலாம் என இழிவாகப் பேசினான் வஞ்சிவேந்தன். அக்காஞ்சி வேந்தனின் மகள் பண்ணைப் போன்ற இனிய சொல்லை உடையவள், பலவாகிய வளையல்களை அணிந்தவள், அவளுடைய ஒளிவீசும் முகத்தில் அம்புகளைப் போன்ற வடிவுடைய கூரிய கண்கள் அமைந்துள்ளன. அவை, தன்னை எளிமையாகக் கருதிய கொடையும் வீரக்கழலும் உடைய வஞ்சியரசனின் மார்பிடத்தில் அவன் விழுமாறு விரைந்து சென்று தைக்கும் என்பது இப்பாடலின் பொருளாகும்.[12]

பெண் கொடுக்க உடன்படாமல் போர் செய்தலை விரும்பியதால் இது மகட்பாற் காஞ்சி ஆயிற்று. தன் மகளைப் பகையரசன் மணமகளாக விரும்பின் அதற்கு மாறாகக் காஞ்சி வேந்தன் போர் செய்து அழிப்பதற்கு அஞ்சமாட்டான் என்பது உறுதி. இதன்வழிக் காஞ்சியரசன் தன் பெண்ணின் மீது பேரன்புடையவன் என்பதும் தன்மான உணர்ச்சியுடையவன் என்பதும் வெளிப்படுகின்றன. இங்கு காஞ்சி என்பது நிலையாமைப் பொருளைப் பெறாது காய்கைப் பொருள் பெறுதலைக் குறித்து நிற்கும்[13] என்று குறிப்பிடுகிறார் நா. சிவபாதசுந்தரனார்.

## முடிவுரை

காஞ்சித்திணை நிலையாமைப் பொருண்மையைக் கொண்டிருந்தாலும் புறப்பொருள் வெண்பாமாலையில் காஞ்சிப் படலமானது நிலையாமையைப் பின்பற்றியது அல்ல. அவ்வாறு தன் மகளை மணம் செய்து கொடுக்கக் கேட்கும் வஞ்சியரசனோடு காஞ்சியரசன் மாறுபட்டு நிற்கும் போர்ச் செய்தியை விளக்குவதே புறப்பொருள் வெண்பாமாலை கூறும் மகட்பாற் காஞ்சி என்பதும், இது நிலையாமையை விளக்கவில்லை என்பதும் இதுவரை கண்ட செய்திகள் வாயிலாகத் தெளிவாகின்றன.

## சான்றெண் விளக்கம்

1. துரை. சீனிச்சாமி, திணைக் கோட்பாடு, ப. 71.
2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு: ஒன்பதாம் நூற்றாண்டு (பாகம் - 1), ப. 249.
3. துரை. சீனிச்சாமி, திணைக் கோட்பாடு, ப. 67.
4. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் புறப்பொருள், பக். 60-61.
5. நா. சிவபாதசுந்தரனார், புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி, பக். 214-215.
6. க. வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு (தொல்காப்பியம்), ப. 272.
7. துரை. சீனிச்சாமி, திணைக் கோட்பாடு, ப. 74.
8. பா. சிவநேசன், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், ப. 44.
9. இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம், நூ. 77.
10. புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப் படலம், கொளு, 24.
11. நச்சினார்க்கினியர் (உ.ஆ.), தொல்காப்பியம் - பொருளாதாரம் (பாகம் - 1), ப. 272.
12. உ.வே. சாமிநாதையர் (ப.ஆ.), புறப்பொருள் வெண்பாமாலை, ப. 41.
13. நா. சிவபாதசுந்தரனார், புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி, ப. 265.